NP – 042

II Semester B.A./B.V.A./D.D.M. Examination, September/October 2022
(NEP – 2021-22 and Onwards)
TAMIL LANGUAGE (Part – I) (Paper – II)

Time : 2½ Hours Max. Marks : 60

SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **(5×1=5)**

1) இவற்றில் மாணிக்க வாசகர் இயற்றிய நூல்
   1) திருவிளையாடற் புராணம் 2) திருவாசகம்
   3) சீவக சிந்தாமணி 4) சிலப்பதிகாரம்

2) வெற்றிலைபாக்கு-இதன் இலக்கணக் குறிப்பு
   1) உம்மைத்தொகை 2) உவமைத்தொகை
   3) எண்ணும்மை 4) பண்புத்தொகை

3) ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று
   1) முத்தொள்ளாயிரம் 2) முக்கூடற்பள்ளு
   3) நந்திக்கலம்பகம் 4) சிலப்பதிகாரம்

4) கி.இராசா இயற்றிய நூல்
   1) கானல்நீர்கனவுகள் 2) வேர்ப்பலா
   3) இலக்கிய மகரந்தங்கள் 4) சுடுமணல்

5) பெரிய புராணத்தின் ஆசிரியர்
   1) சேக்கிழார் 2) திருத்தக்க தேவர்
   3) கம்பர் 4) கபிலர்

St Claret College LIBRARY Bangalore-560013

II. எவையேனும் ஐந்திற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக. **(5×3=15)**

1) கடுங்கதிர் வேனில் இக்காரிகை பொறாள்
   படிந்தில சீறடி பரல்வெங் கானத்து

2) தேவியும் தானும் வந்து எம்மையாளச்
   செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே

P.T.O.

3) பெறலரும் புதல்வன் தன்னைப் பாயினுட் பெய்து மூடிப்
புறமனை முன்றில் பாங்கோர் புடையினில் மறைத்து வைத்தே

4) போர் உழந்து எடுத்த ஆர்எயில் நெடுங்கொடி
வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்ட

5) படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலா யுள்ள
முடிவிலா அறங்கள் செய்து முறைமையாய் வாழும் நாளில்

6) வேட்டுவக்குடி பெண்ணொருத்தி, வேறு பொருளின்றி
விதைக்காக வைத்திருந்த தினையை, உரலில் பெய்து
அதனைக் குத்தி விருந்தினருக்கு உணவாகப் படைத்தாள்

7) சுமேரியாவில் கிடைத்துள்ள சுடுமண் முத்திரை ஒன்றில்
கையில் சிலம்புடனும் தலைப்பகுதில் தீப்பழம்புகளுடனும்
காணப்படும் தெய்வத்தை இனானா என்று குறிப்பிடுகின்றனர்

8) திருமாலைக் குழந்தையாகக் காணும் பெரியாழ்வார்
தமது பாசுரங்களில், பிள்ளைப் பருவத்தின் பல
நிலைகளைக் கண்ணனின் அவதாரமாகக் கருதிப்பாடுகிறார்

## SECTION – B

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக. **(5×4=20)**

1) பகுபத உறுப்புகளைச் சான்றுடன் கூறுக.
2) எதிர்மறைப் பெயரெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் இவற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3) உரிச் சொல்லின் வகைகளைச் சான்றுடன் குறிப்பிடுக.
4) வடசொல் என்றால் என்ன ? அதன் வகைகளைச் சான்றுடன் விளக்குக.
5) அப்பூதியடிகள், திருநாவுக்கரசரைக் காண்பதற்கு முன்பே அவர்மீது பக்திகொண்டு, ஆற்றிய செயல்கள் யாவை ?
6) கோவலனைப் பிரிந்த மாதவியின் நிலையைக் கௌசிகன் எவ்வாறு எடுத்துரைத்தான் ?
7) பண்டைத் தமிழ் இலக்கியங்களின் வழி அறியலாகும் பாணர்களின் தளர்ச்சி நிலை குறித்து எழுதுக.
8) பாவேந்தர் பாரதிதாசனின் காதல் பாடல்களில் உள்ள சமூக சீர்த்திருத்தம் குறித்து எழுதுக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கு வினாக்களுக்குச் விடை தருக. **(4×5=20)**

1) மாணிக்க வாசகர், சிவபெருமானை திருப்பள்ளியில் இருந்து எவ்வாறு எழுப்புகின்றார் ?

2) பாண்டிய மன்னனின் செங்கோன்மைச் சிறப்பினைக் கோவலன், எவ்வாறு எடுத்துரைக்கின்றான் ?

3) அப்பூதியடிகளின் மூத்தமகன் எவ்வாறு குணமடைந்தான் ?

4) மனிதனின் தொல் பழங்குடிச் சிந்தனை வரலாற்றில் 'ஏழு' என்ற எண்ணின் 'ஆட்சி' எவ்வாறு உள்ளது ?

5) புதுமைப் பித்தனின் கதைகளில் இடம் பெற்ற புரட்சிப் பாத்திரங்கள் குறித்து எழுதுக.

6) பண்டைக் காலத்து அரசர்கள் விருந்தோம்பும் பண்பினராய் இருந்தனர் என்பதைச் சான்றுடன் புலப்படுத்துக.